இந்த நிலையில், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தீவிர கவனத்தில் கொண்டு, இத்தொழிலுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருளான மெழுகினை, தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் மூலமும், Chennai Petroleum Corporation Limited (CPCL) என்ற நிறுவனத்திலிருந்தும் மொத்தமாகக் கொள்முதல் செய்து, தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், விலை உயர்வுக்கு மற்றொரு முக்கிய காரணமான, கழிவுக் காகித இறக்குமதிக்கு ஐரோப்பிய நாடுகள் விதித்த தடை ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. தடை விலக்கிக்கொள்ளப்பட்டதால், 6 வாரம் முதல் 8 வாரக் காலத்திற்குள் கழிவுக் காகிதம் இறக்குமதியாகும். இதனால் தீப்பெட்டி செய்வதற்கான காகித அட்டையினுடைய விலையும் நிச்சயமாக, படிப்படியாகக் குறையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மற்றொரு மூலப் பொருளான பொட்டாசியம் குளோரைடு, ரஷ்யா, பெலாரஸ் நாடுகளைத் தவிர்த்து, ஜோர்டான் நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருவதால், தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு பொட்டாசியம் குளோரைடு தங்குதடையின்றி கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, உரிய தீர்வு காண அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தமிழகத்தில் உருமாறிய புதிய கொரோனா வைரஸ் பரவுவதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் புதிய கொரோனா வைரஸ் பரவுவதாக வந்துள்ள செய்தி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ந. தளவாய் சுந்தரம், திரு. பி. தங்கமணி, திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, திரு. M. ராஜமுத்து மற்றும் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி

ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

முற்பகல் 11–45

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலையும் முடிந்து, இப்போது ஒரு நல்ல சூழ்நிலையில், நாம் எல்லோரும் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் சொல்லப்போனால், எல்லோருமே கொஞ்சம் relaxed ஆக இருக்கக்கூடிய சூழல் நிலவி வருகிறது. இதே சூழல் தொடர வேண்டுமென்பதுதான் நம் எல்லோருடைய எதிர்பார்ப்பு, ஆவல், எண்ணம் ஆகும். அதே நேரத்தில், அண்மையில் வந்து கொண்டிருக்கின்ற செய்திகளில், குறிப்பாக, இந்தியாவில், தமிழகத்தில் இந்த வைரஸைப் பொறுத்தவரைக்கும் mutation ஆகிக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே Delta, அதற்குப் பிறகு Omicron என்று வந்தாலும்கூட, இப்போது omicron–ல் 7 sub–variants வந்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. அதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த sub–variant–ல் XE என்றவொரு sub–variant 10 சதவிகிதம் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது என்ற அந்தச் செய்தியையும் மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 627 எண்ணிக்கையில் இந்த வைரசினுடைய positive–வைப் பதிவு செய்திருக்கிறார்கள். குறிப்பாக, தாய்லாந்து போன்ற மேலைநாடுகளிலும் XE–னுடைய sub–variant பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இந்தச் சூழ்நிலையில், ஒரு பதற்றமில்லாத சூழ்நிலை இருந்தாலுங்கூட, ஜுன் மாதத்தில் இது பரவக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள். இன்னொருபுறம், மத்திய அரசின் சார்பில், மகாராஷ்டிரா, கேரளா போன்ற 5 மாநிலங்களுக்கு ஒரு alertness கொடுத்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், எதிர்க்கட்சி என்ற முறையிலே எங்களுடைய கவலை என்னவென்று சொன்னால், தமிழகத்திலே தகுதி படைத்தவர்கள் 18 வயதிற்கு மேலுள்ளவர்கள் 48 இலட்சம் பேர் இன்னும் 1st dose vaccine எடுக்காமல் இருக்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. 2nd dose குறித்து நாம்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 ஏப்ரல் 12

பலமுறை நினைவூட்டியும்கூட, 1 கோடியே 37 இலட்சம் பேர் கிட்டத்தட்ட 2 கோடி பேர் இன்னும் second dose போட வேண்டிய நிலையிருக்கிறது. இந்த மாதிரி 2 கோடி பேர் dose போடாத சூழ்நிலையில், வருகிற ஜூன் மாதத்தில் இந்த வைரஸ் ஒருவேளை வந்தால், அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது? முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ன? ஆயத்தப் பணிகள் என்ன? இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மக்களுக்கு என்ன அறிவுரைகள் வழங்கப்படவிருக்கின்றன என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, 2 கோடி பேர்களுக்கு second dose–ஐ ஜூன் மாதத்திற்குள் நீங்கள் போட வேண்டும். அதில் கொஞ்சம் தொய்வு இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். Vaccine drive–ல், திருவிழா எல்லாம் நடைபெற்று, தொய்வு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். இந்தச் சூழலில், அந்தத் தொய்வை சரி செய்து ஜூன் மாதத்திற்குள் 2 கோடி பேர் second dose–ஐ complete செய்ய வேண்டுமென்று கேட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா உருமாற்றம் என்பது Corona, Alpha, Beta, Delta, Delta Plus, அதேபோல் Omicron, Gamma, Kappa என்று தொடர்ந்து பல பெயர்களில் உருமாறிக் கொண்டேயிருக்கிறது. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஓமைக்கிரானுடைய உருமாற்றம் என்பது, 7 வகைகளாக இருக்கிறதென்று அண்மையில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தைப் பொறுத்தவரையில், 627 பேருக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஓமைக்கிரானைவிட 10 சதவிகிதம் வேகமாகப் பரவும் தன்மை உடையது என்று சொன்னாலும்கூட, கண்டறியப்பட்டு ஒரு மாத காலமாகியும் 627 என்கின்ற நிலையிலேயே அங்கே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதுவொரு ஆறுதலான செய்தி. அதோடு மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, 2019, டிசம்பர் திங்கள் ஒன்றாம் தேதிதான் முதல் தொற்று உலகத்தில் உருவானது. அன்றிலிருந்து இந்தியாவைப் பொறுத்தவரையில், 2020 ஜனவரி திங்கள்

2022 ஏப்ரல் 12] [திரு. மா. சுப்பிரமணியன்]

27 ஆம் தேதி கேரளாவில், திருச்சூரில் ஒரு தொற்று உருவானது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 2020 மார்ச் திங்கள் 7 ஆம் தேதி முதல் தொற்று உருவானது. மாண்புமிகு தமிழக முதல்வர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கிறபொழுது, மே திங்கள் 7 ஆம் தேதி 2021 அன்றைக்கு 25,435 என்கின்ற எண்ணிக்கையில் அந்தத் தொற்று மிக வேகமான, உச்ச நிலையில் இருந்தது. அப்பொழுது 2–வது அலையின் தாக்கம் என்பது உலகமே படுகதறலோடு இருந்த நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த அதிதீவிர நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு 2–வது அலையும் முற்றுக்கு வந்தது. 3–வது அலையும் இல்லாமல் போய், கடந்த ஒரு மாத காலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) 50–க்கும் கீழாக தொற்றின் எண்ணிக்கையும் தொடர்ந்து ஒரு மாத காலமாக உயிரிழப்பு ஏதுமில்லாத நிலையும் இன்றைக்கு தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

கடந்த மூன்று அலைகளிலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில், 34,53,112 பேருக்கு தொற்று ஏற்பட்டிருக்கிறது. இதில், 38,025 பேர் உயிரிழந்தும் இருக்கிறார்கள். எனினும், 3–வது அலையில், பெரிய அளவிலான பாதிப்பு என்பது, தொடர்ச்சியாக இல்லாமல் போனது. நேற்றைக்கு முன்தினம் தடுப்பூசிக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் தலைவர் திரு. என்.கே. அரோரா அவர்கள் சென்னையில் ஓர் ஆய்விற்காக வந்திருந்தார். அவரை நான் நேரில் சந்தித்தேன். சந்தித்தபோது, இந்த ஓமைக்கிரானில் இப்போது புதியதாகப் பரவத் தொடங்கி இருப்பதாகச் சொல்லப்படுகிற XE *என்கின்ற வைரஸ் உருமாற்றம் குறித்து அவரிடத்தில் கேட்டேன். இது உண்மைதான் என்று அவர் சொன்னார்.* U.K*–ல் 627 பேருக்கு வந்திருக்கிறது. அதையும் தாண்டி, இந்தியாவில் குஜராத்திலும், மகாராஷ்டிராவிலும் ஒவ்வொன்று கண்டறியப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை, வந்திருப்பது* XE *உருமாற்றம் இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறது. எது எப்படியிருந்தாலும்,* XE*–ம் ஓமைக்கிரானின் 7 வகைகளில் ஒன்று என்கின்ற அளவில் இருந்துகொண்டிருக்கிறது. என்றாலுங்கூட, நாம் இன்றைக்கு மிக முன்னெச்சரிக்கையாக தடுப்பூசி போடுவது போன்று வருகிற இந்த உருமாற்றங்களுக்குப் பிறகு நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, இன்றைக்கு சர்வதேச*

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 ஏப்ரல் 12

விமான நிலையங்களில் வருகிற அனைவரையுமே பரிசோதிக்கத் தொடங்கியிருக்கிறோம். அதுவும்கூட random–ஆக ஒவ்வொரு விமானத்தில் இருந்தும் இரண்டு சதவிகிதம் பேருக்கு RT–PCR பரிசோதனைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11–50

இதைக் காட்டிலும் இன்னொரு மிக முக்கியமான செய்தி, இந்தியாவிலேயே முதல்முறையாக நமது மாநிலத்தில் Whole Genome Sequencing என்கின்ற முழு மரபணு வகைப்படுத்துதல் கருவியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2021 செப்டம்பர் 14 ஆம் தேதி DMS வளாகத்தில் திறந்து வைத்தார்கள். இதன்மூலம், ஏற்படுகிற அந்த உருமாற்றங்கள் குறித்த விஷயங்களைத் தொடர்ந்து தமிழக அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது; கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல். நாளை மறுநாள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நாளை மறுநாள் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் புதிய தீவிர, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கான மேம்படுத்தப்பட்ட படுக்கைகளை திறந்து வைத்து, அதன்மூலம் தமிழகம் முழுவதும் இருக்கிற அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், 2096 படுக்கைகளை, 365 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறந்து வைக்க இருக்கிறார்கள். ஆக, இந்த Omicron–ன் பரவல் 'XE' வடிவத்தில் வந்தாலும், எந்த வடிவத்தில் வந்தாலும் தமிழகத்தில் அதை எதிர்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்குத் தயாராகவே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தடுப்பூசியைப் பொறுத்தவரை, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 103 நாட்கள் கடந்த கால அரசில் அவர் பொறுப்பேற்றிருந்த சமயத்தில் தினந்தோறுமான சராசரி தடுப்பூசி என்பது 61,441 ஆக இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற அன்றைக்கு ஒட்டுமொத்தமாக போடப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கையே 63 இலட்சம் என்கின்ற அளவிலே இருந்தது. ஆனால் இன்று காலை வரை, தமிழகத்தில் போடப்பட்டிருக்கிற தடுப்பூசிகளின் எண்ணிக்கை 10 கோடியே 55 இலட்சத்து 17 ஆயிரத்து தொள்ளாயிரத்து 59 (மேசையைத் தட்டும் ஒலி) இதில் முதல் தவணை என்பது 92.37 சதவிகிதம்; 92.37 சதவிகிதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணை தடுப்பூசியைப் பொறுத்தவரை, 77.19 சதவிகிதம் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது.

2022 ஏப்ரல் 12] [திரு. மா. சுப்பிரமணியன்]

இந்தியாவிலேயே தடுப்பூசியை ஓர் இயக்கமாகவே மாற்றிக் காட்டியவர் வணக்கத்திற்குரிய தமிழகத்தின் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் தொடர்ந்து 27 வார காலம், ஒவ்வொரு வாரமும் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. இருப்பினும் மன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்த அரசு மிக முன்னெச்சரிக்கையாக எதிர்காலத்தில் எந்தவிதமான தவறும் இதில் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே, தடுப்பூசியைப் போடும் பணியை இன்றளவும் ஓர் இயக்கமாகவே மாற்றிக்கொண்டிருக்கிறது. என்றாலுங்கூட இந்தப் புதிய, புதிய உருமாற்றங்கள் என்பது நம்மை அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன.

இப்போது U.K–விலும், U.S.A–விலும், Germany–யிலும் தினந்தோறும் 30,000 பாதிப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. நேற்றைக்கு Brazil–ல் 21,000 பேர் பாதிப்பட்டிருக்கிறார்கள். Australia–வில் நேற்றைக்கு 40,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்கொரியாவில் நேற்றைக்கு 90,000 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. France–ல் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் புதிய தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, உலகம் முழுவதும் இந்த உருமாறுகிற கொரோனா உலக மக்களை அச்சுறுத்திக்கொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில், தமிழகத்திலேயும், நாம் எதிர்காலத்தில் அந்தத் தொற்றிலிருந்து மீண்டு வருவதற்கு முழுமையான தடுப்பூசி இயக்கத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்னெடுத்து சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிற்கான தடுப்பூசிக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுத் தலைவர் மரியாதைக்குரிய எம்.கே. அரோரா அவர்களை நான் நேரடியாக சந்தித்தபோது, அவர் சொன்னதும் இன்றைக்கு பத்திரிகையின் வாயிலாக அவர் அறிவித்திருப்பதும், பெரிய அளவில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதாகும். இருந்தாலுங்கூட, நாம் எச்சரிக்கையோடு இருக்கிறோம் என்பதை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.